Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 264

வியாழக்கிழமை 17 ஓகஸ்ட் 2023

ஆடி 32 ஆம் நாள் – வள்ளுவர் [illegible]ாடு [illegible]4

அக்கரைவெளியில் தமிழரின் காணிகளை

# சிங்களவர்களுக்கு வழங்கினோம்; ஒப்புக்கொண்டனர் அதிகாரிகள்

## மேலதிக நடவடிக்கைக்கு தடை விதிப்பு

முல்லைத்தீவு, ஓகஸ்ட் 17

மகாவலி 'எல்' வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் அக்கரைவெளியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமாகவிருந்த காணிகளை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளித்ததை மகாவலி 'எல்' வலய அதிகாரிகள் நேற்று ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து காணிகள் பகிர்ந்தளிப்பை உடனடியாக நிறுத்துவதுடன், பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவேண்டாம் எனவும் நேற்றுப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. »11

## 9 பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு, ஓக. 17

இன்று தொடக்கம் 9 வகையான பொருள்களின்விலைகளைக் குறைக்க லங்கா 'சதொச' தீர்மானித்துள்ளது. 400 கிராம் பால் மா பக்கெற்றின் விலை 29 »10

## ஆட்சேர்ப்பும் இல்லை! வாகனங்களும் இல்லை!!

கொழும்பு, ஓக. 17

2024ஆம் ஆண்டில் அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளுக்கு வரவு -செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார். »10

## வந்தேறுகுடிகளே தமிழர்கள்: இது பௌத்த - சிங்கள நாடு!

### தலைகளைக் கொய்வேன் என்ற கருத்தை மீளப்பெறமாட்டேன் என்று மேர்வின் மீண்டும் கூப்பாடு

கொழும்பு, ஓக. 17

கொழுந்து பறிப்பதற்காக மலையகம் வந்த தமிழர்களுக்காகவும், சோழர்களுடன் வடக்கு மற்றும் கிழக்குக்கு வந்த தமிழர்களுக்காகவும் நாட்டைப் பிளவுபடுத்த இடமளிக்க முடியாது. இது சிங்கள பௌத்த நாடு. பௌத்தர்கள் விரும்பும் இடங்களில் »11

புத்தசாசனத்தை பாதுகாக்க

## பௌத்தர்களே குருந்தூரில் நாளை அணி திரளுங்கள்

### கம்மன்பிலவும் அறைகூவல்

கொழும்பு, ஓக. 17

குருந்தூர்மலையில் நாளை வெள்ளிக்கிழமை இந்து மத வழிபாட்டில் ஈடுபடப் போவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் »11

மடுப்பெருவிழாவில்

## விஷஜந்துக்களால் 25 பேருக்குப் பாதிப்பு

மன்னார், ஓக. 17

மன்னார் மடு ஆவணி பெருவிழாவில் பங்கேற்ற பக்தர்கள் சுமார் 25 பேர் விஷஜந்துக்களால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள் »11

## 'பூத்தகொடி பூக்கள் இன்றி' புகழ் குமாரசாமி காலமானார்

யாழ்ப்பாணம், ஓக. 17

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் சங்கீத பூஷணம் செல்லத்துரை குமாரசாமி (வயது - 73) நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார். »11

## பொங்கலை நடத்துவதற்கு அனைவரும் வரவேண்டும்

### குழப்பும் முயற்சியை முறியடிப்போம் முன்னாள் அமைச்சர் சிவநேசன் அழைப்பு

முல்லைத்தீவு, ஓக. 17

பல நூறு கிலோமீற்றர் தொலைவிலிருந்து வந்து குருந்தூர்மலை பொங்கலை குழப்புகின்ற முயற்சி இடம்பெறுகிறது. பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க அனைவரும் முன்வர வேண்டும் என வடமாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்தார். »10



போரின் பின்னர் முல்லையில்

## 85 ஆயிரம் ஹெக்டேயர் நிலம் வனவளத் திணைக்களம் வசம்


### காணியில்லாமல் 3, 500 குடும்பங்கள்

முல்லைத்தீவு, ஓக. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு - போரின் பின்னர் வனவளத் திணைக்களம் 84 ஆயிரத்து 664.33 ஹெக்டேயர் அதாவது மாவட்டத்தின் மொத்த »10

## ஒன்றரை வயதுக் குழந்தை பாம்பு தீண்டி பரிதாபச்சாவு!

### பெற்றோர் கொழும்பில்



கிளிநொச்சி, ஓக. 17

வேலை நிமித்தம் பெற்றோர் கொழும்பில் தங்கியுள்ள நிலையில் பேர்த்தியாரின் அரவணைப்பில்வளர்ந்த ஒன்றரை வயதுக் குழந்தை கண்டங்கரு »11

## கைவைத்தியத்தால் விபரீதம் ஆசிரியர் அநியாயச்சாவு!



யாழ்ப்பாணம், ஓக. 17

கர்ப்பப்பை குழாய் வெடித்து குருதிப் பெருக்கு ஏற்பட்டு இளம் குடும்பப் பெண்ணான ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ள துயரச் சம்பவம் புலோலியில் நேற்று இடம்பெற்றுள்ளது. காந்தியூர், புலோலி தெற்கு, »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போலி 'லைசென்ஸ்: மயிலிட்டிவாசி கைது

யாழ்ப்பாணம், ஓக. 17
போலியான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் மயிலிட்டியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ்.மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது.
கண்பார்வை குறைபாடு காரணமாக முகவர் ஒருவர் ஊடாக ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பணத்தைச் செலுத்தி போலியான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

## 'சனல் ஐ' லைக்காவுக்கு!

கொழும்பு, ஓக. 17
'சனல் ஐ' தொலைக்காட்சி சேவையை லைக்கா நிறுவனத்துக்குக் குறுகியகால அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் நஷ்டத்தில் இயங்கிவரும் 'சனல்-ஐ' தொலைக்காட்சியை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விப்பத்திர அறிவிப்பை வெளியிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்வதை நோக்கமாகக் கொண்டே இவ்வாறு குத்தகைக்கு விடப்படவுள்ளது. பெரும்பாலும் லைக்கா நிறுவனம் இந்த ஒப்பந்த உரிமத்தைப் பெறும் என்று கருதப்படுகின்றது.
இதுதொடர்பில் அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கு, அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தபோதிலும் 'சனல் ஐ' நஷ்டத்தில் இயங்குவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை என்பதால் அமைச்சரவையின் அனுமதி தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)



# நெருக்கடிகளுக்குள் கதிரியக்கத்துறை!

### மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 17**
**நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும், கதிரியக்கத்துறை கடும் நெருக்கடிக்குள் செல்லப்போகின்றது என்றும், நிபுணர்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் இதுதொடர்பில் விடுத்துள்ள எச்சரிக்கைக் குறிப்பில் உள்ளதாவது:-
நாடுமுழுவதுமுள்ள மருத்துவமனைகள், தற்போது கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறை காரணமாக துறைசார் நெருக்கடியை எதிர்கொள்கின்றன.
இதனால், இந்தச் சோதனைகள் எதிர்காலத்தில் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இரத்தினபுரி, பதுளை மற்றும் காலி பொதுமருத்துவமனைகள் தற்போதே கடும் நெருக்கடியை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளன.
அதிகாரிகளின் பணிஓய்வு மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்புக்காகச் செல்கின்றமை என்பனவே கதிரியக்கத்துறை இவ்வாறு நெருக்கடிக்குள் சிக்குவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.
எனவே இதுதொடர்பில் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம)

## வேலையின்மை விகிதம் அதிகரிப்பு

கொழும்பு, ஓக.17
இந்த ஆண்டின் முதல் காலாண்டு காலப்பகுதியில் இலங்கையில் வேலையின்மை விகிதம் 4.7 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளின்படி, ஆண்களின் வேலையின்மை விகிதம் 3.4 சதவீதமாகவும், பெண்களின் வேலையின்மை விகிதம் 7.0 சதவீதமாகவும் உள்ளது.
2023 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் முழு நாட்டையும் உள்ளடக்கிய தரவுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட இலங்கை தொழிலாளர் படை கணக்கெடுப்பின்படி, இலங்கையில் வேலையற்றோர் எண்ணிக்கை 3 இலட்சத்து 99 ஆயிரத்து 999 என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு காலப்பகுதியில் இலங்கையில் பொருளாதார ரீதியாக சுறுசுறுப்பான மக்கள் தொகை சுமார் 8.6 மில்லியன் என அந்த அறிக்கை கூறுகிறது.
அதில் 65.0 சதவீதம் ஆண்களும், 35.0 சதவீதம் பெண்களும் அடங்குகின்றனர். (எ-இ)



## அமைதியைப் பேணவேண்டியது மதத்தலைவர்களின் பொறுப்பே

### கர்தினால் பிரையன் உடக்வே தெரிவிப்பு



மன்னார், ஓக. 17
நாட்டில் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது மதத்தலைவர்களின் பொறுப்பு என்று தெரிவித்துள்ளார் கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் கர்தினால் உடக்வே.
மடுத்திருத்தலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திருவிழாத் திருப்பலியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகள் வரவேற்புக்குரியன.
இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு வத்திக்கான் ஆதரவு வழங்கும். அத்துடன் கத்தோலிக்க திருச்சபையின் ஆசீர்வாதமும் இதற்குக் கிட்டும்.
நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணவேண்டிய பெரும் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு. மதத் தலைவர் ஒருவர் நாட்டைப் பிளவுபடுத்தும் மத முகவராக மாறுவதா அல்லது நாட்டை ஒன்றிணைக்கும் மதத் தலைவராக மாறுவதா என்பது அவரவர் செய்யும் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது - என்றார். (ம-26)

### மருத்துவர்கள் வெளியேற்றம்:

# அரசாங்கம் தடுக்காவிடின் சூனியமாகிவிடும் நாடு!

கொழும்பு, ஓக. 17
மருத்துவர்கள் நாட்டைவிட்டுச் செல்வதை தடுப்பதற்கு - மிஞ்சியுள்ள மருத்துவ நிபுணர்களைத் தக்கவைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதுவிடின் சுகாதாரத்துறை நெருக்கடியைச் சந்தித்து நாட்டு மக்களிடையே பெரும் தாக்கத்தைச் செலுத்தும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் விசேட மருத்துவ நிபுணர் அசோக குணரத்ன எச்சரித்துள்ளார்.
செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-
அதிகமான மருத்துவர்கள் இந்த நாட்டில் எதிர்காலமில்லை என நாளுக்குநாள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். அதிகரித்த வரி, நாட்டின் ஸ்திரமின்மை போன்ற விடயங்களாலேயே அவர்கள் வெளிச்செல்கின்றனர்.
மருத்துவர்கள் நாட்டைவிட்டுச் செல்வதை தடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவில்லை. இது சுகாதாரத்துறைக்கு அபாய எச்சரிக்கையாகும்.
இன்று மருத்துவமனைகளில் இரண்டு மருத்துவர்கள் இருந்த இடங்களில் ஒருவரே பணியாற்றுகிறார். இந்த நிலைமை தொடருமானால் சுகாதாரத்துறை சுருங்கிவிடும். இதுதொடர்பாக 10 மாதங்களுக்கு முன்னரே நாம் கூறிவருகிறோம், சுகாதார அமைச்சு அது தொடர்பில் கண்டுகொள்ளாதுள்ளது.
தற்போது சுகாதார அமைச்சு, மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறிச்செல்வதன் காரணத்தை மறைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். இதனைத் தவிர்த்து அவர்களை ஊக்குவிக்கும் வகையிலேயே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும், இல்லாதுவிடின் நாட்டின் எதிர்காலம் சூனியமாகிவிடும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கு இப்போது '13' அவசியமில்லை

## மொட்டுக்கட்சி கூறுகிறது



**கொழும்பு, ஓக. 17**

**இனங்களிடையே முறுகலை ஏற்படுத்தும் வகையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு நடவடிக்கை எடுப்பது தற்போது ஏற்புடையதல்ல. மக்களின் பொருளாதார நெருக்கடிகள் இன்னமும் நீங்கவில்லை என்பதை உணரவேண்டும்.**

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி.திஸாநாயக்க, மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:-
அதிகாரப்பகிர்வில் கைவைப்பதற்கான நேரம் இதுவல்ல. வடக்கு மக்களுக்குப் பெரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.
விவசாய நிலப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை என நீண்டு செல்கிறது. அவற்றுக்குத் தற்போது நடவடிக்கை எடுப்பதே சாலப்பொருத்தம்.
மாறாக இனங்களிடையே முறுகலை ஏற்படுத்தக்கூடிய வகையில் - நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில் - '13'ஐ கையில் எடுத்திருப்பது நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளேயே தள்ளும்- என்றார். (ச-44)

## நாயால் கடியுண்ட புள்ளிமான் மீட்பு!

கொழும்பு, ஓக. 17
கெக்கிராவ - கலாவெவப் பகுதியில் நாயின் தாக்குதலுக்குள்ளான புள்ளிமான் ஒன்று வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளால் உயிருடன் மீட்கப்பட்டு, சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு மீண்டும் தேசிய பூங்காவில் விடப்பட்டுள்ளது.
நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் தண்ணீர் இல்லாத நிலையில், கலாவெவ தேசியப் பூங்காவில் இருந்து விலகி தண்ணீர் தேடிச்சென்ற மான்குட்டியே இவ்வாறு கடியுண்டுள்ளது. எனினும், மான் தற்போது முழு உடற்தகுதியுடன் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அரச சேவைக்கே மருத்துவர்கள் முன்னுரிமையளிக்கவேண்டும்

### மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
அரச மருத்துவசேவையைப் புறந்தள்ளி தனியார் மருத்துவ சேவையை ஊக்குவிப்பது- கவனம் செலுத்துவது மருத்துவர்களின் சேவைக்கு புறம்பானதாகும். மருத்துவர்கள் மக்கள் நலன்சார்ந்து சேவையாற்றவேண்டும்.
-இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கில் சுமார் 100 க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் இருக்கிறார்கள். எமது பகுதிகளில் தனியார் சிகிச்சை நிலையங்களும் காணப்படுகின்றன. ஆனால், வசதி படைத்தோர் மாத்திரமே அங்கு செல்லமுடியும்.
அரச மருத்துவ சேவையும் குறித்த சேவையை சிறந்த முறையில் வழங்குகின்றது. தனியார் மருத்துவமனைகளே அதிகளவு வசதிகளைக் கொண்டிருக்கக்கூடும் என மக்கள் பிழையான எண்ணத்தைக் கொண்டுள்ளனர். அரச மருத்துவமனைகளிலேயே பாதுகாப்பான மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. மருத்துவர்கள் அரச மருத்துவ சேவையைப் புறந்தள்ளி தனியார் சேவையை ஊக்குவிப்பார்களாயின் அது நீதிக்குப் புறம்பானது - என்றார். (ச-125)

## ஆடைக்கான வரிகளை அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஓக.17
இறக்குமதி செய்யப்பட்ட தைத்த ஆடைகளுக்கான வரிகளை அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.
இறக்குமதித் தடை நீக்கப்பட்ட பின்னர் நேரடி ஆடைகளின் இறக்குமதி அதிகரித்துள்ளது. இதனால் உள்நாட்டில் ஆடை உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஆடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் யசோதரன் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போது, வருடாந்தம் இலங்கை மக்கள் ஆடைக்கொள்வனவுக்காக 600 பில்லியன் ரூபாவைச் செலவிடுகின்றனர். அதில் 300 பில்லியன் ரூபா உள்நாட்டு உற்பத்திக்காகச் செலவிடப்படுகின்றது - என்றார். (எ-இ)

## கைதிக்கு கைபேசி சிறைகாவலர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிக்கு அலைபேசி வழங்கிய குற்றச்சாட்டில் சிறைச்சாலை அலுவலர் ஒருவர் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சி.சி.ரி.வி. காணொலியில் கண்காணிக்கப்பட்டு சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது கைதியிடமிருந்து கைபேசி மீட்கப்பட்டது.
கைதியிடம் மேற்கொண்ட விசாரணையில் சிறைச்சாலை அலுவலர் ஒருவரே அவருக்கு கைபேசி வழங்கியமை கண்டறியப்பட்ட நிலையில், சந்தேகநபரான அலுவலர் கைதுசெய்யப்பட்டார்.
அவரை மேலதிக விசாரணையின் பின் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26,27)





**எமதர்மராசா தன்ர எருமைமாட்டை விட்டிட்டு, டிப்பரை தன்ர வாகனமாக்கி கனகாலமாகிட்டுது. எங்க பார்த்தாலும் அடிக்கடி டிப்பர் அடிச்சு ஆக்கள் சாகிற செய்தியள்தான் வந்துகொண்டேயிருக்கு. போன திங்கட்கிழமை கோப்பாய்ச் சந்தியில , ரெட்லைட் விழுந்திட்டு எண்டு அதை மதிச்சு நிண்டவைக்கு மேல பின்னால வந்த டிப்பர் அடிச்சு, சமுர்த்தி மனேச்சர் ஒராள் அதிலயே செத்தது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.**

**இந்த சமுர்த்தி மனேச்சர் முதல் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில வேலை செய்து கொண்டிருந்தவா. 2015 இல ஒருநாள் அவா பைக்கில போகேக்க, குறுக்க ஒரு நாய் ஒண்டு ஓடி அக்சிடெண்ட் ஆகிட்டுது. நல்லவேளையா காயத்தோட தப்பிட்டா. ஆனால் கால் எலும்பு முறிஞ்சு, பிறகு அதுக்கு 'பிளேட்' எல்லாம் வைச்சுத்தான் நடமாடுறமாதிரி வந்தவா. எண்டாலும் அந்த அக்சிடெண்டுக்கு பிறகு அவான்ர உடம்பு ஏலாமப் போட்டுது. அடிக்கடி வருத்தம். அதோட காலில வைச்ச பிளேட்டாலையோ என்னவோ இன்பெக்சன் ஆக்கி, கால் மடிச்சு வைக்கவே கஷ்டம். இந்தநிலைமையில அவாக்கு வீட்டுக்கு கிட்ட உள்ள கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் வந்திருக்கு. ஆனால் அங்க இதே பதவியில ஒராள் இருந்ததால, சங்கானைக்கு போகச் சொல்லி ஓர்டர் வந்திருக்கு. அது தூரமெண்டதால கடும் போராட்டத்துக்குப் பிறகு, கோப்பாய்க்கு தற்காலிக இணைப்புக் கிடைச்சு கிட்டடியிலதான் வந்தவா. அதுக்கிடையில இப்பிடி சிக்னலை மதிக்காத டிப்பர், அவாவை அடிச்சி விழுத்தி, இடுப்புக்கும் மேலயும் ஏறி உயிரைக் குடிச்சிட்டுது.**

**இப்பிடி டிப்பர்க் கொலையள் கூடிக்கொண்டே போறதுக்கு காரணம், அதுகளின்ர கடும் வேகம் தான். நாலைஞ்சு 'ட்ரிப்' ஓடினா கூடக் காசு உழைக்கலாம், கள்ள மண்ணை பொலிஸிட்ட ஏப்பிடாமல் கெதியாக் கொண்டு போகவேணும், மற்ற வாகனங்களை விட டிப்பர்தான் கெத்து எண்டு நினைக்கிறது இதுகள் தான் இப்பிடி நடு றோட்டில மட்டுமில்லாமல் குச்சொழுங்கையளுக்கையும் டிப்பருகள் ரேஸ் ஓடுறதுக்கு காரணங்கள். பொலிஸும் அவையிட்ட ஆயிரம் ,ரண்டாயிரத்தை வாங்கிறதிலதான் குறியா இருக்குதே தவிர, ஸ்பீட்டை ஒருநாளும் பிடிக்கிறேலை. இத்தனைக்கும் டிப்பர் சனங்கள் நடமாடுற இடத்தில 40 கிலோமீற்றருக்கு கூட ஓடக்கூடாது. ஆனால் இஞ்ச 80 கிலோமீற்றர் வேகத்துக்கு குறைய டிப்பருகள் ஓடினாலே அதிசயம்தான்.**

**முந்தி இரவிலதான் டிப்பர் ஓடலாம் எண்ட சட்டம் இருந்தது. இப்ப அது குப்பைக்கூடைக்குள்ள போட்டுது போல. அப்பிடி இரவு மட்டும் தான் டிப்பர் ஓடவேணும், 40 கிலோமீற்றருக்கு கூடுதலான ஸ்பீட்டோட ஓடக்கூடாது எண்டதை நடைமுறைப்படுத்தினாலே உந்த டிப்பர்க் கொலையளை கனக்கக் குறைக்கலாம். உரியவை யோசிப்பினமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸின் சாதனை தமிழனுக்கு யாழ்ப்பாணத்தில் கௌரவிப்பு

பிரான்ஸ் ஜனாதிபதிக்கு பாண் தயாரித்து வழங்கும் ஈழத்தமிழன் தர்ஷன் செல்வ ராஜ் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தால் நேற்றுமுன்தினம் கௌரவிக் கப்பட்டார்.

பிரான்ஸ் நாட்டில் இடம்பெற்ற பேக்கரி உற்பத்திப்பொருள் போட்டியில் வெற்றி பெற்ற தர்ஷன் ஒருவருடம் பிரான்ஸ் ஜனாதிபதிக்கு பாண் விநியோகிக்கும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள நிலையிலேயே யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அவரைக் கௌர வித்துள்ளது. (அ-ஒ,125)

# செல்வச்சந்நிதி கொடியேற்றம்



வரலாற்றுச்சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திரு விழா நேற்று புதன் கிழமை மாலை 3 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஏராளமான பக்தர்கள் கொடியேற்றத்தில் பங்கேற்றனர். (அ-ஒ,100)

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 12 . 1936

இறப்பு 15 . 08 . 2023



### கந்தையா சாம்பமூர்த்தி

**(ஓய்வுபெற்ற விஞ்ஞானம், உடற்கல்வி ஆசிரியர், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, பழைய மாணவனும், யூனியன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியர்)**

மலேசியாவை பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும், புத்தூர் மேற்கு சிவன்கோவிலடியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சாம்பமூர்த்தி அவர்கள் கடந்த (15.08. 2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (மலாயன் பென்சனியர் - தெல்லிப்பளை) இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற க.சி.பெரியதம்பி பாக்கியம் (புத்தூர்) தம்பதியினரின் மருமகனும் சிவஞானதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமரேசன், மோகனகுமார் மற்றும் சாந்தகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகாவின் அன்பு மாமனாரும் ஸ்வாதி, ஸர்விகா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான நடராஜா (மலேசியா). தியாகராஜா. சரஸ்வதி, மகேஸ்வரி மற்றும் கணேசமூர்த்தி (இலங்கை வங்கி முகாமையாளர்), மதனகாமேஸ்வரி (தெல்லிப்பளை). ஈஸ்வரி (இளைப்பாறிய RMP). சுந்தரமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்களான மாணிக்கவாசகர் (கிராம அலுவலர்). கலாரூபன் மற்றும் சிவனேசதேவி (அவுஸ்திரேலியா). விக்னேஸ்வரன் (கனடா). திருஞானசம்பந்தர் (புத்தூர்), குகானந்ததேவி (புத்தூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.08.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று புத்தூர் மேற்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்கோவிலடி,**
**புத்தூர் மேற்கு, புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 40446) A-1

## விழிநீர் அஞ்சலி

மண்ணில் 15.09.1940 — விண்ணில் 16.08.2023



எமது பாடசாலையின் கணிதபாட ஆசிரியர் காந்தராஜா அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கணபதி இராசமணி

அவர்கள் நேற்று (16.08.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**இளவாலை கன்னியர் மட ம.வி.**

(CR 40447)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 01 . 1948

மறைவு 15 . 08 . 2023



### திருமதி சோமசுந்தரம் இராசலட்சுமி

பெரியாவுடை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், இன்னாவத்தை கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது உந்துடை, அளவெட்டி மத்தி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் இராசலட்சுமி 15.08.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் அமரர்களான வைத்திலிங்கம், மாமாங்கம் ஆகியோரின் பாசமிகு மகளும் அமரர்களான பெரியதம்பி இளையபிள்ளை அவர்களின் மருமகளும் இராஜினி தேவி, சிவலோகநாதன் (லண்டன்), இரஞ்சினி தேவி, சியாமினி (ஆசிரியர் யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), சிவனேசன் (பிரான்ஸ்), அமரர் அபிமினி (போதனாசிரியர் அஞ்சல் பயிற்சிக்கல்லூரி, அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணேசலிங்கம், புனிதவதி (லண்டன்), மாசிலாமணி விஜிதா, சதீஸ்குமார் (குறிஞ்சி களஞ்சியம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் அன்னலட்சுமி, சீதாலட்சுமி, விஜயலட்சுமி, வரதராசா, திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் துஷாந்,சேதுசன்,டக்ஷி ஆகியோரின் அம்மம்மாவும் திசானி, சிவானிகா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் நாளை வெள்ளிக்கிழமை (18.08.2023) காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்புகளுக்கு**
**077 9490 995**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25975) M-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 08 . 1943

மறைவு 16 . 08 . 2023



### திருமதி சிவசம்பு கமலாவதி

சிவசம்பு கமலாவதி அவர்கள் நேற்று (16.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியின் மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சீதேவிப்பிள்ளை தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற புனிதவதி, காலஞ்சென்ற இராஜபூபதி, காலஞ்சென்ற திலகவதி, புஸ்பவதி, காலஞ்சென்ற கைலாசபதி, காலஞ்சென்ற ஶ்ரீபதி, கருணாபதி அவர்களின் அன்புச் சகோதரியும் விசாலாட்சியின் மைத்துனியும், தயானந்தன், தமயந்தி, தயாபரன், தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்சினி, சரவணபவன், சஞ்சுதா ஆகியோரின் மாமியும் தனேஸ், ஜமீரா, சூரியா, மதுமிதா, சஸ்மிதா, சமீரா, சித்தார்த் ஆகியோரின் பேர்த்தியும் சுந்தரலிங்கத்தின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023 ) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25980) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை


" கனவு காணும்போது
ஒரு மனிதன்
மேதையாகிறான் "
– அகிரா குரோசோவா

## உலகின் இருப்புக்காகவேனும்.....!

கடந்த சில நாள்களுக்கு முன்னர் 'நெடுந்தீவுக் குதிரைகள் வெப்ப காலத்தில் தண்ணீரின்றி வாடுகின்றன' என்ற பதிவு பலராலும் பகிரப்பட்டு, அன்றிரவே யாழ்.மாவட்ட அரச அதிபரின் முயற்சியால், அந்தக் குதிரைகளுக்கான தண்ணீர்த்தொட்டிகள் நிரப்பப்பட்டன. இதன்மூலம் நெடுந்தீவுக் குதிரைகளின் தண்ணீர்த்தேவை கிரமமாகப் பூர்த்திசெய்யப்படும் நிலை எழுந்துள்ளது. அதேபோன்று புங்குடுதீவிலும் நல்லுள்ளம் கொண்ட சிலர் தம்முடைய தனிப்பட்ட முயற்சியில், விலங்குகள் நீர் அருந்தும் வகையில் தொட்டிகளுக்கு நீர் நிரப்பி வருகின்றனர். இதுவும் அண்மைக்காலத்தில் சமூகவலைத்தளங்களில் பேசுபொருளானது. இவ்விரு தகவல்களும் இந்த அனலெறியும் காலத்தில் வாய்பேசமுடியாத ஜீவராசிகள் தண்ணீருக்காக அலைவதையும், அதை மனித நடவடிக்கை மூலமே தடுக்கமுடியும் என்பதை உணர்த்தி நிற்கின்றன.

புங்குடுதீவு, நெடுந்தீவு போல ஏனைய இடங்களிலும் விலங்குகளின் தாகம் தணிக்கும் பணிகளை அரசாங்கமும், தன்னார்வ அமைப்புகளும் ஆரம்பிக்கவேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் வெம்மையென்பது மேற்குறித்த இரண்டு பகுதிகளிலும் மட்டும் நிலவவில்லை. நாடெங்கும் இதேநிலைதான். சுமார் 6 ஆயிரம் யானைகள் தண்ணீரின்றி இலங்கைக் காடுகளில் வாடுகின்றன என்ற புள்ளிவிவரமும் சமீபத்தில் வெளியாகியுள்ளது. அளவில் பெரியவை என்பதாலும், கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுபவை என்பதாலும் யானைகளின் தாகம் புள்ளிவிவரங்களூடாக வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால், இலங்கையின் காடுகளிலும், ஊர்மனைகளிலும் ஆடு, மாடு, எருமை, அணில், மான், நாய், குரங்கு என பல்வேறு உயிரினங்களும் – பல்லாயிரக்கணக்கில் – இதேபோன்றுதான் தாகத்தால் அந்தரித்து அலைகின்றன. அவற்றின் தாகத்தைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு மனிதனுக்கேயுரியது. ஏனெனில் இயற்கை எல்லா உயிரிகளுக்குமெனப் படைத்த உலகை மனிதன் தனக்கு மட்டுமேயானதாக மாற்றிக்கொண்டான். விளைவு? காடுகள் அழிக்கப்பட்டன, நீர்நிலைகள் வற்றிப்போயின, இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டன, பசுமைப்போர்வை இல்லாதொழிக்கப்பட்டது, வனஜீவராசிகளின் வாழ்விடம் பறிக்கப்பட்டது. மனிதன் இயற்கையைக் குழப்பாமல் இருந்திருந்தால், அந்த ஜீவராசிகளுக்குத் தேவையான நீரும், உணவும் தேவையானளவு கிடைத்திருக்கும். அவற்றைப் பறித்தவர்கள் தானே கொடுக்கவும் வேண்டும். அத்தோடு இப்போது உலகெங்கும் உருவாகியுள்ள 'எல்–நினோ' வெப்பப்பேரிடருக்கும் மனிதனின் பேராசையே காரணம். உலகம் ஒவ்வொரு கணமும் மனித நடவடிக்கைகளால் சூடேறிக்கொண்டே வருகின்றது. அந்த வெப்பத்தைத் தணிப்பதற்கு அமெரிக்கா போன்ற சில நாடுகள் இன்னமும் ஒத்துழைப்பதில்லை. எனவே உலகப்பந்து வெப்பமடைவதை இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனால் ஒவ்வொரு வருடமும் கோடைகால அனலின் தாக்கமும் ஏறுமுகமாகவேயுள்ளது. இப்படி எல்லாப் பக்கமும் நிகழ்த்தப்படுகின்ற மனிதத்தவறுகளுக்கான தண்டனையை அனுபவிப்பதென்னவோ அப்பாவி விலங்குகள் தான்.

அவற்றின் வாழ்விடமான வனங்கள் அழிக்கப்பட்டு, நீரும் உணவும் அரிதாக்கப்பட்ட நிலையில் வெப்பமும் அவற்றைத் துரத்தியடிக்கின்றது. மக்களின் வாழ்விடக் காணிகளைக் கூட விட்டுவைக்காமல், அவையும் தமக்கேயுரியதென அபகரித்துக் கொள்வதில் காட்டும் அக்கறையை விலங்குகள் மீதும் வனஜீவராசிகள் திணைக்களம் காட்டவேண்டும். நெடுந்தீவில் கூட குதிரைகளுக்கான நீர்த்தேவையை வனஜீவராசிகள் திணைக்களமே செய்திருக்க வேண்டும். ஆனால் அந்தத் திணைக்களம் அதனைச் செய்யாததால், அனர்த்த முகாமைத்துவப் பிரிவே குதிரைகளுக்கான தண்ணீரை வழங்கிவருகின்றது. தமக்குரிய பொறுப்புகளை வனஜீவராசிகள் திணைக்களம் தட்டிக்கழிப்பதும், விலங்குகள் நீரின்றி அலைவதற்கு மிகமுக்கியமானதொரு காரணம். தண்ணீருக்காக அலையும் போது, இந்த விலங்குகளைப் பாதுகாப்பதும் அவற்றுக்குத் தண்ணீர் வைப்பதும் தான் இப்போது அவசியமா? என்ற கேள்வியும் பலருக்கு எழக்கூடும். ஆனால் உண்மை அதுதான். மனிதன் மட்டுமல்லாது, விலங்குகள், தாவரங்கள் என எல்லாம் சேர்ந்த உயிர்த்தொகுதியில் ஏதேனும் ஒன்றின் சமநிலை தளம்பினாலும் ஆபத்து மனிதனுக்கும், உலகத்துக்கும் தான். எனவே விலங்குகளுக்காக இரக்கம் காட்ட மனமில்லாவிடினும், குறைந்தபட்சம் உலகினதும், மனிதகுலத்தினதும் இருப்புக்காகவேனும் எம்மால் இயன்றவரை விலங்குகள், பறவைகளின் தாகத்தையும் பசியையும் தணிக்கும் நடவடிக்கைகளில் ஒவ்வொருவரும் இறங்கவேண்டும்.




# இலங்கைக்கு வருகின்றது ஐ.எம்.எப். அதிகாரிகள் குழு

## நிதி வசதித்திட்ட செயற்றிறனை ஆராயும்

கொழும்பு, ஓக.17

**சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று, அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளது.**

கடந்த மார்ச் மாதம் அங்கீகரிக்கப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலருக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான முதலாவது மீளாய்வுக்காக இந்தக் குழு இலங்கைக்கு வரவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தக் குழுவினர் இலங்கைக்கு வருவார்கள் என்று சர்வதேசநாணயநிதியத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

நிதி வசதித் திட்டத்தின் செயற்றிறன் அதிகாரிகள் குழுவாலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபையாலும் அங்கீகரிக்கப்பட்டால், சுமார் 338 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இலங்கைக்கு வழங்க அனுமதிக்கப்படும்.

சர்வதேசநாணயநிதியத்தின் நிர்வாகசபை கடந்த மார்ச் மாதம் 48 மாதவிரிவாக்கப்பட்ட நிதி வசதியின்கீழ் 3 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்குவதற்கு அங்கீகாரமளித்தது. அதன்முதல் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## செப்ரெம்பரில் 'சினோபெக்'

கொழும்பு, ஓக.17

சினோபெக் நிறுவனத்தின் கீழ் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதியில் இருந்து அந்தப் பெயரின் கீழ் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

109 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சினோபெக்குடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. ஆரம்பத்தில் சினோபெக் நிறுவனத்தினர் இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அதியுச்ச சில்லறை விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர். எந்தவொரு நிறுவனமும் இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் விலை நிர்ணயத்தை விடவும் அதிக விலையில் எரிபொருளை விற்பனை செய்ய முடியாது - என்றார். (எ-இ)

## கறுவாவுக்காக திணைக்களம்

கொழும்பு, ஓக.17

கறுவா அபிவிருத்திக்கான புதிய திணைக்களம் ஒன்றை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சிறு ஏற்றுமதி பயிராக அந்நிய செலாவணியை ஈட்டுவதற்காக கறுவாப்பயிர் வழங்கிவரும் பங்களிப்பை கருத்திற்கொண்டு, அதை வணிகப் பயிராக மேம்படுத்த வேண்டிய அவசியத்தை 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்ட யோசனையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், தரப்பண்பை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தல், உற்பத்தியை பன்முகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்தத் திணைக்களம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கறுவா அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இந்தத் திணைக்களத்தை ஆரம்பிப்பதற்கான யோசனையை ஜனாதிபதி மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்திருந்தனர். (எ-இ)

## நாளை

18.08.2023
வெள்ளிக்கிழமை
ஆவணி 01

சுபநேரம் : 06.05 – 07.35
ராகுகாலம் : 10.35 – 12.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

## மு / தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை
## தேறாங்கண்டல், துணுக்காய்

## திருமதி மங்களேஸ்வரி சிவனேஸ்வரன் ( SLTS - I)



மங்கள நாயகியே வருக - நிதம்
மங்களம் பொங்கிட வருக - உம்மிடம்
பொறுமைக்கு இலக்கணம் வகுக்கலாம்
பாசத்திற்கு வரைவிலக்கணம் கேட்கலாம்
காரியத்தில் சிகரம் நீர் காட்டிய
கல்வி வித்தையில் கடலும் நீர்

சுறுசுறுப்பில் எறும்பு போலும்
சுடரொளி பரப்பும் தீபம் போலும்
மங்கள நிகழ்வின் அதிபதியும் நீர்
பாலப்பருவப் பிள்ளைகள் சூழ
பாடம் கற்பிக்கும் வெண்கட்டியும் தான்
எண்ணும் எழுத்தும் கற்றிடுவேன் என்ற
எண்ணம் மனதில் சூழ எழ
அறுபது வருடங்களும் ஓங்கிநிற்க
அடுத்த சந்ததிக்கு வழிகாட்டும்
வாழையடி வாழையாக வாழ வென - வாழ்த்துகின்றோம்.

சேவை விவரம்:
- மு / மல்லாவி மத்திய கல்லூரி - 15.03.1990 - 24.04.2011
- மு / தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை - 25.04.2011- 17.08.2023

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
மு/தேறாங்கண்டல் அ.த.க.பா. தேறாங்கண்டல், துணுக்காய்.

(CE404440) (N.1)

---

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

தோற்றம் 25 • 05 • 1934



மறைவு 29 • 07 • 2022

கடந்த 29.07.2022 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் திருமதி சிவசிங்கம் புஷ்பகாந்தி

அவர்களின் முதலாம் ஆண்டு திவச நிகழ்வுகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இலந்தையடி லேன்,
உடுவில் மேற்கு, சுன்னாகம்.

(CS51494)AH-1

குடும்பத்தினர்.

---

"ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ"

# மரண அறிவித்தல்

பிறப்பு 23 • 09 • 1957



இறப்பு 13 • 08 • 2023

## திருமதி சிவலிங்கம் தங்கமணி (சின்னமணி)

மாவிட்டபுரம் மடத்தடியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் தங்கமணி (சின்னமணி) அவர்கள் கடந்த (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவலிங்கம் (சிவலிங்கம் சிற்பகலாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவப்பிரபா (Mobil lubricants நிறுவன வட பிராந்திய நிறைவேற்று விற்பனை பிரதிநிதி) அவர்களின் பாசமிகு தாயாரும், சிவசங்கர் (லண்டன்), சிவரஞ்சனி (பிரான்ஸ்), சிவராஜ் (DS Office, உடுவில்) ஆகியோரின் சிறிய தாயாரும், சந்திரீன், உதயசங்கர், சிந்தியா ஆகியோரின் மாமியாரும், சிதம்பரநாதன், கனகம்மா பாலசுப்பிரமணியம், பராசக்தி, கமலாதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, ஜீவரட்ணம், இராசதுரை, துரைராஜா, மகாலிங்கம் மற்றும் நாகரட்ணம், கந்தசாமி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சந்தானலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், அஸ்வராணி, அபிஷாந், சுப்ரவின், சாத்வின், அஸ்வின், ஆதிரா, செழியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவலிங்கம் - கணவர் - 077 127 4451
பிரபா - மகன் - 077 110 5852

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25964) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்தாக்கல் கூட்டுத்தாபன தலைவர் அஜித்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக மருத்துவர் அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர் முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பணியாற்றியிருந்தார். (எ-இ)


**நாஹா மருத்துவ நிலையம்**

தீராத கை கால்விறைப்பு, முழங்கால் பாதிப்பு, பாரிசவாதம், நீரிழிவு, அல்சர், சிறுநீரக பாதிப்பு, மாறாத புண்கள் உடனடி நிவாரணம்.

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

**ஓட்டோச்சாரதி தேவை**

சிறுவர் இல்லத்திற்கான ஓட்டோ ஒன்றிற்கு பொறுப்பும் அனுபவம் வாய்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட சாரதி தேவைப்படுகிறார். திருநெல்வேலியை அண்மித்து வாழ்பவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகாமையாளர் : 021 222 8490
021 721 0910


## கண்ணீர் அஞ்சலி

யாழ். எவக்கிறீன் அச்சகத்தின் உரிமையாளரும் எமது கழகத்தின் உறுப்பினருமான

**மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். வணிகர் கழகம்**
**இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஊர்காவற்றுறையின் உதவி முகாமையாளர் திரு.ம. சிறிஸ்கந்தராஜா அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி தனபாலன் சரஸ்வதி**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/51683)AH-1

முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, ஊர்காவற்றுறை.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராசையா**
**சரவணபவன் (பழனி ஆசாரி)**

தோற்றம் 13.04.1953 — மறைவு 07.08.2013

திதி : 17.08.2023




என்றென்றும் எம்முள்ளே
ஏற்றம் தர வந்தவரே
எம்மை விட்டு பிரிந்து
10 ஆண்டுகள் சென்றாலும்
எந்த வேளையும் எம் நெஞ்சில்
வாழ்வாங்கு வாழ்வீரே

நீர் ஏற்றி வைத்த தீபங்கள்
பிரகாசமாய் பாரினிலே
ஒளிவீசும்
பாதைகள் உருவாக்கியவரே
நாங்கள் பாக்கியம் செய்தவர்கள்
உம்மடியில் பயின்றதால்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 . 12 . 1942



மறைவு 18 . 07 . 2023

கடந்த (18.07.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இளையதம்பி கிருஸ்ணமூர்த்தி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வருகைதந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனைய வழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**இல.349/16, சிவன் புது வீதி,**
**நல்லூர் யாழ்ப்பாணம்.**
**077 508 2779**

**குடும்பத்தினர்.**

(CS 25974) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 03 • 1928



மறைவு 15 • 08 • 2023

## மாரிமுத்து கனகசபை

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கனகசபை நேற்றுமுன்தினம் (15.08.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து செல்லாச்சி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற சிவகுரு தில்லைவனம் தம்பதியரின் மருமகனும், ருக்குமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஞானம், பாலசுந்தரம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணவதி, மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலாம்பிகை, பராசக்தி, தயாபதி, பரமேஸ்வரி, மாங்கையற்கரசி, கௌரி, லோகேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரன், பரமகுருநாதன் ஆகியோரின் அன்பு தந்தையும், செல்லத்துரை, கோபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், சண்முகநாதன், நிமலரட்ணம், ஜெயரங்கன், பிரபாகரன், தமிழினி ஆகியோரின் மாமனாரும், தனேஸ், விஜிதா, சதீஸ், பிரகாஸ், லோயன், முகுந்தன், லாணி, நிரு, காலஞ்சென்ற பிரசாந், சிந்து, சுஜித், காவின், மெலானி, சர்மி, மிதுலன், தேனு, கீரத்தி, கார்த்தி, சாயி, சங்கி, பிரணவன், மகேஷ், கிருத்திகா ஆகியோரின் பேரனும், மதனா, இஷா, கர்ஜித், நிருத்திகன், டினோசிகன், தஸ்மிதன், ஜெனித்தன், இனியன், ஆதித்யா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய புகையிரத வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 567 1967**
**077 899 6258**

(cs 51685) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஓக.17

நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையின் ஊழியர்கள் குழுவொன்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

2014ஆம் ஆண்டு நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் உரியமுறையில் சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சம்பளத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள போராட்டக்காரர்கள், உரிய தீர்வுக்காகக் காத்திருக்கின்றனர் என்றும் தெரிவித்தனர். (எ-இ)

# குவைத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர்

கொழும்பு, ஓக.17

நுழைவிசைவு இன்றித் தங்கியிருந்த 54 இலங்கையர்கள் குவைத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

53 பெண்கள் மற்றும் ஒரு ஆண் அடங்கிய குழு நேற்று புதன்கிழமை காலை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

குவைத்தில் இருந்து வந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள், பொலநறுவை, மொனராகலை, காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களும் இந்தக் குழுவில் அடங்குவர். குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக கடவுச்சீட்டில் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள், தங்கள் ஆரம்ப பணியிடங்களை விட்டு வெளியேறி, நாட்டின் விதிகளை மீறி வேறு இடங்களில் வேலையில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது. (எ-இ)


யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம்

வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

* காலம் - 30.08.2023 புதன்கிழமை
* நேரம் - மாலை 04.00 மணி
* இடம் - பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(CS 25979)A-1 செயலாளர்.



பிறப்பு 15.10.1943 **கண்ணீர் அஞ்சலி** இறப்பு 14.08.2023



யா/ டிறிபேக் கல்லூரியின் ஆசிரியை

திருமதி ஜெயரஞ்சினி ஜெயரட்ணா

அவர்களின் மாமியார்

**பூமணி விமலதாசா**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

வட்டமேசை - யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (19.07.2023) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**கந்தையா சுப்பிரமணியம் (ரக்டர் மணியம்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (18.08.2023) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து கிரியைகளிலும். மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும். தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு. வெளிநாட்டு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும். துண்டுபிரசுரம். பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி. (CS 25978) A-1 குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 02 . 1933



மறைவு 14 . 08 . 2023

**திருமதி சிவபாக்கியம் சதாசிவம்**

சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் 219, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சதாசிவம் அவர்கள் கடந்த (14.08.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் (ஓய்வுநிலை பிரதம புகையிரத பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவகாமி, சிவதர்மி, சிவவனிதா, சிவமேனகா, சிவச்செல்வி, சிவசக்தி, வசந்தகுமார் மற்றும் காலஞ்சென்ற சிவஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுருநாதன், விவேகானந்தன், நற்குணராசா, உதயநாதன், யசோதா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சீவரத்தினம், சின்னத்துரை, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வபூரணம், அன்னபூரணம், சரஸ்வதி, செல்வரட்ணம், தெய்வநாயகி மற்றும் செல்வராசா ஆகியோரின் மைத்துனியும், வித்தககுமரன், வித்தியாரணி - ஐங்கரன், வல்லவகுமரன் - பவித்ரா, உத்தமகுமரன், அனிருத்தன் - சுஜானி, அயனிகா, துர்க்கா - கிளேமோ, துளசிகா - காந்தீபன், துவாரகன், கவித்தியா, அனிந்திகன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அருளினியா, அருள்நேசிகன், பார்வேந்தன், யான், மதீஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

219, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.


தகவல்: குடும்பத்தினர்.
021 221 4508, 076 3400 667

(CS 25976) A-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1951



மறைவு 16 . 08 . 2023

**திருநாவுக்கரசு சித்திரவேல்**

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

சாரையடி, புலோலி தென் மேற்கை பிறப்பிடமாகவும் 15 ம் கட்டையடி, உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சித்திரவேல் அவர்கள் 16.08.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புலோலி தென்மேற்கு திருநாவுக்கரசு பெரியநாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் 15 ம் கட்டையடி, உடுப்பிட்டி காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் இன்பநிதியின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான திருப்பதி, பரமேஸ்வரி, அம்பிகாவதி மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் சகோதரனும் கேமலதா (அமெரிக்கா), தர்மதா (சிங்கப்பூர்), சஞ்ஜெய் (பொறியியலாளர், கனடா), சர்மிலன் (வைத்தியர், மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் வாசுதன் (அமெரிக்கா), ஜனகன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் தரணியா, சாருஜன், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் புஷ்பநாயகி, காலஞ்சென்ற இராசதுரை, சாந்தகுமாரி, தயாளினி, கமலநாதன், கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முப 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுப்பிட்டி கரம்பாவாளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15 ம் கட்டையடி,
உடுப்பிட்டி

தகவல் : குடும்பத்தினர்.
076 4589 970 (மனைவி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுலம் ம. வித்தியின் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலய 200 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சத்திய குமார் பங்கேற்கவுள்ளார். தொடர்ந்து கலை ஆற்றுகைகள் நிகழ்வைச் சிறப் பிக்கவுள்ளன. மறுநாள் 19ஆம் திகதி சனிக்கிழமை சிறப்புத் தபால் தலை வெளியீடு காலை 9 மணிக்கு பாட சாலையின் கனகசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனா திபதி செயலக வடக்கு அபிவிருத்தி மேலதிக செயலாளர் எல்.இளங்கோ வன் பங்கேற்று தபால் தலையை வெளியிட்டு வைக்கவுள்ளார் என ஏற் பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)




இலங்கையின் மிகப் பெரிய உணவகச் சங்கிலியுடன் இணைந்து உங்கள் தொழில் வாழ்க்கையை சிறப்பாக ஆரம்பியுங்கள்

GCE A/L | GCE O/L முடித்த உங்களுக்காக

முழுமையான சம்பளத்துடன் நிரந்தரமான வேலைவாய்ப்பு

NVQ LEVEL 3,4 (தேசிய தொழில் தகுதி) சான்றிதழ் எம்மிடமிருந்து

CREW MEMBER FULL TIME
• வயது: 18-35
• சம்பளம்: ரூ. 35,000+

CREW MEMBER AGILE FULL TIME
• வயது: 22-45
• சம்பளம்: ரூ. 45,000+
• சாரதி அனுமதிப்பத்திரத்துடன்

DELIVERY RIDERS PARTTIME
• வயது 22-45
• சம்பளம்: ரூ. 35,000+

நேர்முகப்பரீட்சை:
யாழ்ப்பாணம், மானிப்பாய், கோண்டாவில் பீசா ஹட் கிளைகளில்...

மேலதிக விபரங்களுக்கு: 076 9859456


# தெற்குக்குச் செல்லும் சின்ன வெங்காயம்!



யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ்.குடாநாட்டுச் சந்தை களில் சின்ன வெங்காயத் தின் விலை சரிந்துள்ளதையடுத்து தென்பகுதிக ளுக்கு அவை அதிகளவில் எடுத்துச் செல்லப்படுகின் றன என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது சின்ன வெங்காயச் செய்கைக்கான அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

அறுவடை செய்யப்பட்ட புதிய வெங்காயம் தற்போது சந்தைகளுக்கு விநியோ கிக்கப்பட்டு வருகின்றது. அதனால் சின்ன வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி, மருதனார்மடம் சந்தைகளில் ஒருகிலோ சின்னவெங்காயம் 200 ரூபா வரையில் விலை சரிந்து காணப்படுகிறது. இந்த நிலையில் சின் னவெங்காயம் கூடுதலாக தென்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் வரு கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)



தேசிய ரீதியில் நடத்தப் பட்ட யு.சி.மாஸ் (மனக் கணிதம்) போட்டியில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி கற்கும் சுதர்சன் அருணன் என்ற மாணவன் முதலிடத்தைப் பிடித்துள் ளார். (ம-26)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறி யாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்ப தற்கு உகந்த நாள். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். காரியங்கள் நிறைவேறும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுப ட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமத மாகும். மனதில் குழப்பங்கள் ஏற்படும்.

**கடகம்** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். செலவுகளை சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்க வும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூல மான நாளாக இருக்கும். மனக்குழப்பங் கள் நீங்கி தெளிவு பிறக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரி யம் அனுகூலமாக முடியும். சாதகமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பா கத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்று சோர்வு உண்டாகும். கருத்து வேறு பாடு ஏற்படக்கூடும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். உற வினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடை யூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும்.

**மீனம்:** ஆன்மீகத்தில் நாட்டம் அதிக ரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்த னையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

# யாழ். பல்கலையில் அரங்க ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்றுகை, கட்புலக்கலைகள் பீடத்தின் நாடகமும் அரங்கக் கலைகளும் துறையும், வெறுவெளி அரங்கக் குழுவும் இணைந்து நடத்தும் அரங்கவிழா இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக் கிழமையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை மாணவர்களின் 10 நாடக ஆற்றுகைகள், கொழும்பு கட்புலக்கலைகள் மற்றும் ஆற்றுகைக் கலைகள், பல்கலைக்கழகத்தின் 03 நாடகங்கள் என்பன அரங்க விழாவை சிறப்பிக்கவுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை விரிவுரையாளர் கலாநிதி.க.ரதிதரன் நெறியாள்கையில் இரு குறுநாடகங்களும் ஆற் றுகை செய்யப்படவுள்ளன.

அரங்கக் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதோடு சமூகமாகச் சிந்திக்கும் பண்பாட்டுக்கு பக்கத்துணையாக மாணவர்களுக்கு களமாக இந்த அரங்க விழா அமையும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-இ.66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 அடுக்குப் பாதுகாப்பை மீறி

# சென்னை விமான நிலையத்துக்குள் புகுந்த யாழ்ப்பாண இளைஞன் கைது!



சென்னை, ஓக. 17

விமான நுழைவுச்சீட்டு இல்லாமல், 7 அடுக்கு பாதுகாப்பை மீறி சென்னை விமான நிலையத்துக்குள் நுழைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் உச்சகட்டமாக 7 அடுக்குபாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு இளைஞர் ஒருவர் விமான நுழைவுச்சீட்டு, சிறப்பு அனுமதி எதுவும் இல்லாமல், விமான நிலையத்தின் பாதுகாப்பு சோதனை, சுங்கச் சோதனை ஆகிய பகுதிகளைக் கடந்து, குடியுரிமைச் சோதனை நடக்கும் பகுதி வரை சென்று அங்கு சுற்றிக் கொண்டிருந்தார்.

இரவு 10 மணி அளவில் குடியுரிமை அலுவலகப் பகுதியில் ஊழியர் ஒருவரின் கைத்தொலைபேசியை அவர் திருட முயன்றுள்ளார். இதையடுத்து, அந்த இளைஞரைப் பிடித்து விமான நிலைய மேலாளர் அறையில் ஒப்படைத்தனர்.

விசாரணையில், அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தினேஷ் ஞானசூரியன் (வயது - 35) எனவும் 3 மாத விசாவில் இலங்கையிலிருந்து சென்னை வந்திருந்தார் என்பதும் தெரியவந்தது. (அ-ஒ,இ)

# 13 ஆவது திருத்தத்தை அகற்றும் யோசனையைக் கொண்டுவாருங்கள்

## உங்கள் சித்துவத்தை உலகம் அறியட்டும் என்கிறார் மனோகணேசன் எம்.பி.

13 ஆம் திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்த சட்டவரைவை நாடாளுமன்றத்தில் கொண்டு வரட்டும். அதை நாடாளுமன்றம் எப்படி எதிர்கொள்கிறது என்பதை உலகம் அறியட்டும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் எதிர்கொள்ளுங்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன், விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்கவை நோக்கி கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற சிங்கள மொழி அரசியல் விவாத நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டணித் தலைவர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலைமையிலான கட்சிகள் கூட்டாக அமைத்துள்ள உத்தர லங்கா சபாகய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்கவிடம் மேலும் கூறியதாவது,

நான், பிரிபடாத இலங்கைக்குள்ளே நியாயமான தீர்வைத் தேடுகிறேன். அதுவே எங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கொள்கை. நீங்கள் எந்தவொரு தீர்வுக்கும் தயார் இல்லை. அதுதான் உங்கள் கொள்கை. அப்படியானால் உங்களுக்கு நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இந்த 'ப்ளஸ், மைனஸ்' வெட்டிப்பேச்சுகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, உங்கள் கட்சியின் சார்பாக, 13ஆம் திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டவரைவை, நாடாளுமன்றத்தில் கொண்டு வாருங்கள். அதை இந்த நாடாளுமன்றம் எப்படி எதிர்கொள்கிறது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி வாக்களிப்பார்கள் என நாம் தெரிந்து கொள்ளலாம். உலகமும் தெரிந்துகொள்ளும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் சந்திக்கலாம்.

உலகம் சொல்வதைக் கேட்காமல், உலகை ஒதுக்கி வைத்து, சாளரம், கதவுகளை மூடி வைத்து இந்நாட்டை நடத்திய காலம் ஒன்று இருந்தது. அதனால் தான் இன்று இந்நாடு விழுந்து போய் கிடக்கிறது. ஆகவே இப்போதும் நீங்கள் திருந்தவில்லை என உலகம் அறியட்டும்.

மஹிந்த ராஜபக்ச 13 'ப்ளஸ்' பற்றி பேசினார். இப்போது ரணில் 13 'மைனஸ்' பற்றி பேசுகிறார். நீர் 13 'மைனசும்' கொடுக்க கூடாது என்கிறீர். இதன்மூலம் இந்நாட்டு தமிழருக்கு நீர் தரும் செய்தி என்ன? நீர் கூறுவதை கேட்டுக்கொண்டு, கொடுப்பதை சாப்பிட்டுக்கொண்டு வாயை மூடிக்கொண்டு நாம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீரா? அது ஒருபோதும் நடக்காது - என்றார். (அ-ஒ,இ)

### 85 ஆயிரம்...

நிலப்பரப்பின் 35.06 சதவீதமான காணிகளை ஒதுக்கக்காடுகளாக அறிவித்துள்ளது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு காணிகள் இல்லாத நிலை காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இளையோரால் வாழ்வாதாரத் தேவைக்காக காணிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், கால்நடை மேய்ச்சல்தரவைக்காகவும், நூற்றுக் கணக்கான முதலீட்டாளர்களாலும் காணிக்கோரிக்கைகள் தம்மிடம் முன்வைக்கப்படுகின்ற போதிலும், தற்போது பகிர்ந்தளிப்பதற்கு காணிகள் எவையும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலான கலந்துரையாடலொன்று, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் வனவளத் திணைக்களத்தால் 88 ஆயிரத்து 671.05 ஹெக்டேயர், அதாவது 36.72 சதவீதமான காணிகள் ஒதுக்கக்காடுகளாக அறிவிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வனவளத் திணைக்களத்தால் 84 ஆயிரத்து 664.33ஹெக்டேயர், அதாவது 35.06 சதவீதமான காணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒதுக்கக்காடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வனவளத் திணைக்களத்தினால் ஒதுக்கக்காடுகளாக அறிவிக்கப்பட்ட காணிகளில், 20 ஆயிரத்து 543.86 ஹெக்டேயர், காணிகளை விடுவிக்குமாறு இதுவரையில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக 9 ஆயிரத்து 311 ஹெக்டேயர், காணிகளை வனவளத்திணைக்களம் உடனடியாக விடுவிப்பதற்கு பரிந்துரைத்துள்ளது. 11 ஆயிரத்து 232.86 ஹெக்டேயர், காணிகள் வனவளத்திணைக்களத்தால் விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு தேசிய குழுவின் இறுதித் தீர்மானத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - 11 ஆயிரத்து 798.75 ஹெக்டேயர், காணிகள் வனவளத்திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய ஒதுக்கக்காடுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது - என்றார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், குலசிங்கம் திலீபன், ஜனாதிபதி செயலக அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், வனவளத் திணைக்கள அதிகாரிகள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5,246)

### கைவைத்தியத்தால்...

புலோலியைச் சேர்ந்த துளசி அனுசன் (வயது - 30) என்ற ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆசிரியை மன்னார் சென்சேவியர் பெண்கள் கல்லூரியில் கல்வி கற்பித்து வரும் நிலையில் நேற்றுப் புதன்கிழமை காலை 5 மணிக்கு பாடசாலைக்குச் செல்வதற்கு ஆயத்தமான போது வயிற்றுவலி ஏற்பட்டதைத் தொடர்ந்து வீட்டுக்கு வந்து ஓய்வெடுத்துள்ளார்.

இதனையடுத்து அவரது கணவன், புளியம் இலை அவித்து வயிற்று வலி ஏற்பட்ட பகுதியில் ஒத்தடம் கொடுத்து கைவைத்தியத்தை முன்னெடுத்துள்ளார். அதன் பின்னர் காலை 9 மணியளவிலேயே பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பெண்ணைப் பரிசோதித்த மருத்துவர்கள் உயிரிழந்துவிட்டாரெனத் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்புத் தொடர்பில் பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்ட சட்ட மருத்துவ நிபுணர் க.வாசுதேவா, கர்ப்பப்பைக் குழாயினுள் கர்ப்பம் தங்கியதால் அந்தக் கர்ப்பப்பை குழாய் வெடித்தே இறப்பு நிகழ்ந்ததாக அறிக்கையிட்டுள்ளார்.

இதேவேளை - மருத்துவமனைக்கு குறித்த பெண் உரிய நேரத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தால் காப்பாற்றியிருக்கலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (அ-ஒ,100,125)

### பொங்கலை...

குருந்தூர்மலையில் நாளை இடம்பெறவுள்ள பொங்கல் நிகழ்வு தொடர்பில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது சர்ச்சைக்குரிய பேசுபொருளாக இருக்கின்ற குருந்தூர்மலை தமிழர்களுடைய பாரம்பரியமான ஒரு பிரதேசம். தொன்று தொட்டு அங்கே வாழும் தமிழ் மக்கள் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்திலே பொங்கலை மேற்கொள்ளும் போது இந்துக்கள் மாத்திரமல்ல முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களும் கலந்து கொள்வது ஆதி காலம் தொட்டு நடந்து கொண்டிருக்கின்றது.

கடந்த சில காலங்களாக அந்தப் பிரதேசங்களில் எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லாத மக்களால் ஆக்கிரமிப்புக்குரிய நோக்கத்துடன் மேற்கொள்கின்ற விடயம் வேதனைக்குரியதாகவுள்ளது.

ஆலயத்திலே பொங்கலை முன்னெடுக்க ஆலய நிர்வாகம் மேற்கொண்டிருக்கின்ற முயற்சிக்கு வன்னியிலே வாழ்கின்ற மக்கள் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிலே உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (அ-ஒ,27,246)

### ஆட்சேர்ப்பும்...

2024ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை அமைச்சுகளுக்கு வழங்கிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசநிறுவனங்களுக்காக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2024ஆம் ஆண்டிலும் நடைமுறையிலிருக்கும் என வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

### 9 பொருள்களின்...

ரூபாவால் குறைக்கப்பட்டு 970 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. 1 கிலோ சோயாவின் (மொத்த விற்பனை) விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு 625 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. நெத்தலி ஒரு கிலோ விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 160 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. 1 கிலோ பாஸ்மதி அரிசியின் புதிய விலை 675 ரூபாவாகும், இது 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

பிரவுண் சீனியின் விலை கிலோ ரூ.350 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை 325 ரூபாவாகவும், கடலை ஒரு கிலோ 555 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைப்பூடு 630 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ சிவப்பு பச்சை அரிசியின் புதிய விலை 147 ரூபாவாக உள்ளதுடன், அதன் விலையை 2 ரூபாவால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களவர்களுக்கு...

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலான கலந்துரையாடலொன்று, முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி 'எல்' வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைக் கையேற்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதனையும் மீறி கொக்குத்தொடுவாய் அக்கரைவெளியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமாகவிருந்த ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஜூலை மாதம் 28ஆம் திகதி ஜனாதிபதி செயலக அதிகாரிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டபோது, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கொழும்பு அதிகாரிகள் அவ்வாறு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்று மறுத்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் மகாவலி 'எல்' வலயத்துக்குப் பொறுப்பான அதிகாரியும் பங்கேற்றிருந்தார். அக்கரைவெளியில் சிங்கள மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதை அவர் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து கலந்துரையாடலில் பங்கேற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், குலசிங்கம் திலீபன் ஆகியோர் மேலதிகமாக காணிகளைப் பகிர்ந்தளிப்பதை நிறுத்துமாறு பணித்துள்ளனர். அத்துடன் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசுவதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் வழங்கப்பட்ட காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் அவற்றைப் பொலிஸாரைக் கண்காணிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

## வந்தேறுகுடிகளே...

வாழலாம் என குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அந்தப்பகுதியில் வாழ்பவர்களின் தலைகளைக் கொய்வேன் என்று குறிப்பிட்டகருத்தைமீளப்பெற்றுக்கொள்ள மாட்டேன், முடிந்தவர்கள் எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை சிங்கள - பௌத்த நாடு. பௌத்தர்கள் எங்கும் வாழலாம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சிங்களவர்கள் வாழ்வதற்கும், விகாரைகள் அமைப்பதற்கும் தமிழ் அரசியல்வாதிகளிடமும், தமிழ் அதிகாரிகளிடமும் அனுமதிபெறவேண்டிய அவசியமில்லை. தென்னிந்தியாவில் இருந்து கொழுந்து பறிப்பதற்காகவே மலையகத்துக்கு தமிழர்கள் அழைத்து வரப்பட்டார்கள். மறுபுறம் சோழர்களுடன் வந்த தமிழர்கள் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்தார்கள்.

அரச காலத்தில் இலங்கையில் இருந்த பெண்கள் அழகில்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு சிங்கள அரசர்கள் தென்னிந்தியாவில் இருந்து தமிழ் இளவரசிகளைத் திருமணம் முடித்து நாட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

தமிழ் இளவரசிகளுக்காக சிங்கள மன்னர்கள் கோயில்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இவ்வாறான பின்னணியில் தான் தமிழர்கள் இலங்கையில் வாழ ஆரம்பித்தார்கள். பிற்பட்ட காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொன்மையான விகாரைகள் அழிக்கப்பட்டு அதன் மீது கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே தற்போது கோயில்களை இடிக்க வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் குறிப்பிடவில்லை.

தமிழர்கள் சிங்கள - பௌத்தர்களுடன் முரண்பாடு இல்லாமல் நல்லிணக்கத்துடன் வாழலாம். அதை எதிர்க்கவில்லை. ஆனால் பௌத்த மரபுரிமைகளை அழித்து இங்கு வாழமுடியாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்கள் விகாரைகள், மகாநாயக்கர்கள் மீது கை வைத்தால் அவர்களின் தலைகளுடன் களனிக்கு வருவேன் என்று குறிப்பிட்டதை ஒருபோதும் நீக்கிக் கொள்ளமாட்டேன். எனக்கு எதிராக எவரும் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

புலம்பெயர் தமிழர்களின் நோக்கத்துக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டால் அரசாங்கத்துக்கு எதிராக நான் போராட்டத்தில் ஈடுபடுவேன். பௌத்தத்தின் மீது பற்றுள்ளவர்கள் என்னுடன் இணைந்து கொள்ளலாம் - என்றார். (அ-ஒ.இ)

## பௌத்தர்களே...

குருந்தூர்மலைப் பகுதியில் ஒன்றிணைய வேண்டும். இந்து - பௌத்த மோதலை தடுக்கவும், தமிழ் அடிப்படைவாதிகளைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமைஇடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். நாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்களுக்கு மாத்திரம் தான் பிரச்சினை உள்ளது என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி செயற்படுகிறார். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகமாக வாழும் சிங்களவர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும். பௌத்த மரபுரிமைகள் முழுமையாக தமிழ்ப் பிரிவினைவாதிகளால் அழிக்கப்படும் - என்றார். (அ-ஒ.இ)

## விஷஜந்துக்களால்...

எதுடன், பாம்பால் கடியுண்டு இளைஞர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

மடு விழாவின் நவநாட்கள் நடைபெற்ற இரு தினங்கள் அங்கு ஒரு சில மணி நேரம் பெய்த மழை காரணமாக விஷ ஜந்துக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியமையால் இந்த குறிப்பிட்ட தினங்களில் சுமார் 25 பேர் விஷஜந்துக்களின் பாதிப்புக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்தக் காலப்பகுதியிலேயே மன்னார் கத்தோலிக்க ஊடகத் தொகுப்பாளரான ஜெகநாதன் டிறோன் (வயது - 28) பாம்புக்கடிக்கு இலக்காகி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.60)

## 'பூத்தகொடி...



1951 இல் பிறந்த இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறை பட்டதாரி. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இசைத் துறை விரிவுரையாளராகவும் பிரதி அதிபராகவும் சேவையாற்றினார். 'பூத்த கொடி பூக்கள் இன்றித் தவிக்கின்றது' என்ற எங்கள் மண்ணின் திரைப்படப் பாடல் இவர் பாடிய பிரபல பாடல் என்பதுடன் 'ஈழத்துச் சீர்காழி' என்றும் இவர் அழைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## ஒன்றரை...

வளை பாம்பின் கடிக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சோகச்சம்பவம் கிளிநொச்சி, பிரமந்தனாறில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. தனுஜன் ஜஸ்மின் என்ற ஒரு வயதும் 7 மாதமும் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வயல்வெளிக்கு அண்மையாகவுள்ள வீட்டில் கடந்த 14ஆம் திகதி இரவு நித்திரைக்கு குழந்தை சென்றுள்ளது. திடீரென போர்த்தியார் பாம்பு ஊர்வதைப்போன்று உணர்ந்ததையடுத்து எழுந்துள்ளார். அவர் உணர்ந்ததைப் போல அங்கே பாம்பொன்றைக் கண்டார். உடனே அவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டு முற்றத்துக்கு வந்துள்ளார். குழந்தையின் கையிலிருந்து குருதி வழிவதைக் கண்டு உடனடியாக தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு குழந்தை மாற்றப்பட்டது. கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து கொழும்பு பொறளை மருத்துவமனைக்கு குழந்தை மாற்றப்பட்டு அங்கு நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாயும் தந்தையும் கொழும்பிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவதால், தாயின் பெற்றோருடனே பிரமந்தனாறில் குழந்தை தங்கவைக்கப்பட்டிருந்தது. (அ-ஒ.113)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் **32 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

- **நிலப்பரப்பு**
- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி,
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
- பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
- நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

**தொடர்பு: 076 057 0354**
**076 8260 354**

(CS 25959)A-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 09 . 1940



மறைவு 16 . 08 . 2023



**கணபதி இராசமணி**

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கந்தரோடை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி இராசமணி நேற்று (16.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கொ.கணபதியின் அன்பு மனைவியும், அமரர் நாகம்மாவின் அன்புச் சகோதரியும், வ.இராசதுரை, வ.செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், க.பத்மநாதன் (முன்னாள் ஆய்வுகூட உதவியாளர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), க.தவேந்திரராசா, க.குகனேந்திரராஜா (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), க.கதிர்காமநாதன்(அமரர்), க.காந்தராஜா (ஆசிரியர், யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), வி.காந்தரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ப.டேசிராணி (ஆசிரியர், யாழ். கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்), வரஜனி, கு.தர்மினி, தா.அஜந்தினி (ஆசிரியர், யாழ். முருகமூர்த்தி வித்தியாலயம்), தெ.விஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ப.திலக்ஷிகா, த.கபில்ராஜ், த.ஜீவ்ஸ்ராஜ், கு.டர்சன், து.பவிசன், வி.தட்சகன், வி.தரணிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25931)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறான முடிவு; ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம்,ஓக. 17

மனவிரக்தி காரணமாக தவறான முடிவு எடுத்த ஒருவர் மருத்துவமனையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கராசா சதீஸ் (வயது - 41) என்பவரே கடந்த 14ஆம் திகதி தவறான முடிவு எடுத்து உயிரிழக்க முற்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ஓ.26)


## வேலைக்கு ஆள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு நன்கு முன்னனுபவமுள்ள சிற்றுண்டிகள் (பற்றீஸ் / றோல்) தயாரிப்பதற்குப் பெண் ஊழியர் தேவை. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ள முடியும்.

(CS/51682)AH-1

**074 391 0850**

## வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு, கோணாவில் ஒழுங்கை 300 m தூரத்தில் (மருத்துவ பீடத்திற்கு முன்பாக) அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.

(cs 51679) (N-1)

**076 371 6934**

## வேலையாட்கள் தேவை

Aaruth Food City Kayts க்கு வேலையாட்கள் தேவை.
காசாளர் (பெண்கள்)
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

(cs 51698) (N-1)

**076 371 6934**

## தேவை

பிரபல புடைவைக் கடை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

245, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**071 415 0995**

## காணி விற்பனைக்கு

கொற்றாவத்தையில் 6 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**077 168 6494**


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 10 . 1971

மறைவு 14 . 08 . 2023

### திருமதி கௌரிமலர் நாவேந்தன்

(ச முர்த்தி முகாமையாளர் - சங்கானை (தற்காலிக இணைப்பு கோப்பாய்))

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கௌரிமலர் நாவேந்தன் கடந்த (14.08.2023) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் செல்லத்துரை - செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகராசா - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், நாவேந்தனின் (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) அன்பு மனைவியும், இலங்காராணி (ஆசிரிய நூலகர் - யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்), நந்தகுமாரி (லண்டன்), ஆனந்தசெல்வராணி (ஆசிரியர் - யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), திருக்குமரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகநாதன் (டயஸ் - இரசாயன ஆசிரியர் - New Science World), சுதாகரன் (லண்டன்), குமரசிறி (அஞ்சல் உத்தியோகத்தர்- யாழ்ப்பாணம்), கர்ஷிகா (லண்டன்), நந்தகுமார் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியும், சுவஷ்டிகா, கம்ஷாந், நேருஷா (லண்டன்), ஆதன்யன் (லண்டன்), அரவன் (லண்டன்), ஹிசானி, கீர்த்திகா ஆகியோரின் பெரியம்மாவும், யுவனின் (லண்டன்) அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (பலாலி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

**076 309 4993, 075 241 6957, 077 411 8846**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 17 - 05 - 1957

மறைவு 18 - 07 - 2023

கடந்த (18.07.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தம்பிராசா தருமரத்தினம்

(உரிமையாளர் - சென்றல் மோட்டோர்ஸ் - யாழ்ப்பாணம், சங்கர் மோட்டோர்ஸ் - சுன்னாகம்)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

(cs. 51694) (N-1)

குடும்பத்தினர்
**076 764 2897**

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 04 . 1962

மறைவு 15 . 08 . 2023

### திருமதி சின்னத்துரை இராஜேஸ்வரி (சொக்கம்மா)

கரவெட்டி மேற்கு, மத்தொனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (15.08.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னப்பொடியன் - முருகன் இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சின்னத்துரையின் (இலங்கை மின்சாரசபை ஊழியர்) அன்பு மனைவியும், ஜெயதீபன் (சுவிஸ்), துசிக்கா (உரிமையாளர் - ஆருத்தியா மல்ரிசொப்), தர்சிகா (சுவிஸ்), பிரசாத் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அகிலன் (சுவிஸ்), சிவதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆருத்யா, ஆர்சித், அக்ஷைனி, ஆத்விகன், ஆகாஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மத்தொனியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மத்தொனி,
கரவெட்டி.

(24732)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

**076 574 7111**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org